# தமிழ்நாடுவேளாண்மைப் பல்கலைக்கழகம்

## தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிலையம் - ஆடுதுறை

## தஞ்சாவூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

(02.04.2022 முதல் 06.04.2022)

அறிக்கை எண்: 26/2022 தேதி :01.04.2022

### தஞ்சாவூர் மாவட்டத்தின் கடந்த வார வானிலை

பெரும்பாலான பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை 36 °செ ஆகவும் குறைந்தபட்ச வெப்பநிலை 27 °செ முதல் 28 °செ ஆகவும் பதிவானது.

### தஞ்சாவூர் மாவட்டத்தில் எதிர்பார்க்கப்படும் வானிலை (02.04.2022 முதல் 06.04.2022)

| கடந்த வார வானிலை (29.03.2022 முதல் 31.03.2022) | | | காரணிகள் | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலைமுன்னறிவிப்பு (02.04.2022 முதல் 06.04.2022) வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| நாள்-1 29/03 | நாள்-2 30/03 | நாள்-3 31/03 | தேதி | நாள்-1 02/04 | நாள்-2 03/04 | நாள்-3 04/04 | நாள்-4 05/04 | நாள்-5 06/04 |
| 0 | 0 | 0 | மழை (மி.மீ.) | 0 | 0 | 0 | 0 | 0 |
| 36 | 36 | 36 | அதிகபட்ச வெப்பநிலை (°செ) | 36 | 36 | 36 | 36 | 37 |
| 28 | 27 | 28 | குறைந்தபட்ச வெப்பநிலை (°செ) | 27 | 27 | 27 | 27 | 27 |
| 4 | 4 | 4 | மேகமூட்டம் (ஆக்டா) | 3 | 4 | 4 | 2 | 2 |
| 70-57 | 68-59 | 70-56 | அதிகபட்ச மற்றும் குறைந்தபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 75-60 | 75-60 | 75-60 | 75-60 | 75-60 |
| 5 | 6 | 6 | காற்றின் வேகம் (கி.மீ./மணி) | 10 | 10 | 10 | 10 | 10 |
| தென் கிழக்கு | தென் கிழக்கு | தென் கிழக்கு | காற்றின் திசை | தென் தென் கிழக்கு | தென் தென் கிழக்கு | தென் கிழக்கு | தென் கிழக்கு | தென் தென் கிழக்கு |

### தஞ்சாவூர் மாவட்டத்திற்கான வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

வரும் நாட்களில் வானம் பெரும்பாலும் மிதமான மேகமூட்டத்துடன் காணப்படும். 02.04.2022 முதல் 06.04.2022 ஆகிய தினங்களில் மழை இல்லை. அதிகபட்ச வெப்பநிலை 36 °செ முதல் 37 °செ ஆகவும் குறைந்தபட்ச வெப்பநிலை 27 °செ ஆகவும் காலை நேர காற்றின் ஈரப்பதம் 75 சதவிகிதமாகவும் மாலை நேர காற்றின் ஈரப்பதம் 60 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 10 கி.மீ. அளவுக்கு பெரும்பாலும் தென் கிழக்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

### வேளாண் அறிவுரைகள்

| | | |
|---|---|---|
| பொது | | அடுத்து 5 நாட்களுக்கு வறண்ட வானிலை காணப்படுவதால் கரும்பு, எள் மற்றும் நெல் தரிசுப் பருத்திக்கு சீராக நீர் பாய்ச்சவும். |

| | | |
|---|---|---|
| பயறுவகை பயறுகள் | உளுந்து | நெல் தரிசு பயறுவகைப் பயிர்களுக்கு பூக்கும் தருணத்திலும், அடுத்து 15 நாட்கள் இடைவெளியிலும் டிஏபி (2 சதம்) + முரியேட் ஆப் பொட்டாஷ் (1 சதம்) கரைசலை காலை அல்லது மாலை நேரங்களில் கைத்தெளிப்பான் கொண்டு தெளிக்கவும். டிஏபி கரைசலுக்கு பதிலாக **“பயறு அதிசயம்”** எக்டருக்கு 5.0 கிலோ என்ற அளவில் மொட்டு வைக்கும் தருணத்தில் கைத்தெளிப்பான் கொண்டு தெளிக்க வேண்டும் |
| பயறுவகை பயறுகள் | உளுந்து | கோடை பருவத்தில் இறவையில் உளுந்து பயிருக்கு ஆடுதுறை 5 ஏற்ற இரகம். |
| பருத்தி | | நெல் தரிசுப் பருத்திக்கு 45-ம் நாள் ஒரு களை எடுத்துவிட்டு 3 நாட்கள் கழித்து உரமிட்டு மண் அணைத்து நீர் பாய்ச்சவும். |
| கால்நடைகளுக்கு | மாடு | அடுத்த சில தினங்களுக்கு பகல் நேர வெப்ப நிலை அதிகரிக்க வாய்ப்புள்ளதால் தங்களின் கால்நடைகளை காலை மற்றும் மாலை வேளைகளில் மேய விடுவதுடன் நண்பகல் நேரத்தில் நிழல் பகுதியில் நிறுத்தி வைக்கவும். |

## குறுஞ்செய்தி

அடுத்து 5 நாட்களுக்கு வறண்ட வானிலை காணப்படுவதால் கரும்பு, எள் மற்றும் நெல் தரிசுப் பருத்திக்கு சீராக நீர் பாய்ச்சவும்.

**இயக்குநர்**